# THE MORNING STAR

*Registered as a Newspaper.* ( Established 1841 ) Published Every Friday

Vol. 135 JAFFNA, FRIDAY, 10TH OCTOBER, 1975. No. 40

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


## The Salvation Army

The annual Music Festival organised by the Salvation Army will be held on Saturday, October 18th at 6 p. m. at Trimmer Hall, Jaffna. A Band Group from Colombo and the Kaithady Children's Home will participate in "A Thanksgiving of Annual Appeal" under the patronage of Commissioner Gladys Calliss, the Territorial Commander for Sri Lanka. The programme includes a Cornet Duet, Vocal Trio, Tembrel Display, Band March concluding with a "Quietude" by the Band.

Captain and Mrs. Crowden, the District Officers at Kaithady will be leaving shortly and they will be replaced by Captain and Mrs. Ariaratnam. A Farewell and Welcome have been fixed for Sunday, 19th at 9 a. m. at Kaithady where Commissioner Gladys Calliss will address the gathering.

## Laymen's Institute

A short course in the *Conduct of Worship and Preaching the Word of God* is being arranged to be held at the Ashram, Chunnakam during October, 1975 — February, 1976. Courses on the Contents and Message of the Bible, Liturgy and Worship, Craft of the Sermon, Christian beliefs and Doctrines and the Heritage of Our Churches will be given in the form of lectures and seminars in Tamil on seven or eight fixed Saturdays between 9 a. m. and 3-30 p. m.

The course is being organised by Rev. S. N. Sugunananthan under the auspices of the Christian Institute of Study of Religion and Society, the Ashram, Chunnakam. It is hoped that many will avail themselves of this course.

## Terminal Fellowship Meeting of the J. I. C. C. F.

The Jaffna Inter - Collegiate Christian Fellowship conducted its Terminal Meeting at The Women's Centre, Inuvil on Friday the 26th instant. The meeting which commenced at 8-30 a. m. was presided over by Mr. R. E. J. A. Setukavalar, President of the Fellowship. The main talks were given by Messre. Victor Manoharan and Suri Williams of the Youth for Christ Movement. The programme also consisted of games, playlets, sing-song and group discussion.

Eighty one students and seven teachers from St. John's College, Chundikuli Girls' College, Jaffna College, Uduvil Girls' School, Jaffna Central College, Vembadi Girls' High School and The Jaffna Academy, participated at the meeting.

The meeting ended at 4-20 p. m. At the end of the day's proceedings, Mr. S. Jebanesan, the General Secretary of the J. I. C. C. F. proposed the vote of thanks. He thanked the speakers, the teachers who accompanied the students and Mrs. J. T. R. Perinpanayagam, the Director of the Women's Centre, for the hospitality and kindness shown to the delegates.

## Parents' travails keep mounting

Eighteen thousand students have qualified to enter the University of Sri Lanka on the results of the Advanced Level Examination held in April this year. Out of this number 13,200 are Arts students. This year the University hopes to increase the intake of students to the six campuses from 3000 to 5000. Even then a large number of Arts students will be shut out. Whether the grades assigned to pupils is on raw marks or on mediawise standardised marks are not officially known.

One Lakh thirty-seven thousand students will sit the N.C.G.E. Examination to be held for the first time in December this year but only fifteen percent will be eligible for higher education. The G. C. E. (O. L.) Examination will be held this year and two years more for the repeaters. Informed sources indicate that all questions in each of the *ten* subjects will not be compulsory at the N. C. G. E. Examination.

According to the latest unemployment figures in the island, 38 percent of the jobless are in the age group of 17 to 20 years.


## "THE CHRISTIAN HOME" WEEK

**12th — 18th October**

THEME:

"But as for me and my house, we will serve the Lord,"

*Joshua 24 : 15.*

## "THE CHRISTIAN HOME" FESTIVAL

**on Saturday, 18th October**

at 3-30 p. m.

at the Uduvil Church.

C. AMBALAVANAR
Convener, Women's Fellowship,
J. D. C. S. I.


## GRACE J. PAUL,

M. A. ( Columbia )

*A sister's tribute*

She carved out an edifice of a life which took in such building bricks as Religion, Science, Maths, Music, Literature and community service, working hard to bring into fruitions her dreams for Kandy High School and for her community. Uncompromising standards and refusal to cow down to unreasonable authority characterised her action. Immaculately groomed in every detail, a stately figure of dignity, she disapproved of sloppiness in speech, dress or manners in others. Her speech was beautiful, her words carefully chosen, her rich contralto voice vibrant. She and I shared much of our experience. If either of us read a striking article, or learnt a new piece of music, or found an usual plant, we shared it with the other. If either of us published an article, it was the comments from the other that we valued most. It was she who first introduced Kandyan dancing into the Kandy High School, and the *Swarna hansa* ballet of vivid memory still seems to vibrate with its drum beats and tinkling bells.

For her last birthday, Ipressed some flowers that she and my mother loved, — chrysanthemums, marguerites, violets entwined with maiden hair (so much like her curly tresses of younger days, now turned silver) and mounting them on a card, I sent them with an original poem. She wrote that I could not have chosen a better greeting. From Jerusalem I would write to her of every holy site we visited, every Jewish festival we attended, of Jacob's unfathomable well, and the quiet hours of meditation on the shores of Galilee, and she would write back to say how thrilled she was, for she had become part of that experience herself. There was one water-colour painted by a friend in Jerusalem, of the Sea of Galilee which stirred both of us to our inner-most depths. That picture of the Sabbath rest of Galilee, where Jesus knelt to share with us the "silence of eternity", the fleecy clouds melting into the hazy mountain's of Moab — she had hung where she could see it from her bed, all the while during her last days. The same picture is before me as I write. The structure, the quietness, the primness, the wholeness of the craftmanship of that edifice we call Grace Paul, spills its beauty even when life is fled, and will continue to inspire family, friends and students, for she has filled her niche in Time and Eternity.

RANEE S. SATTHIANADHAN


JAFFNA COLLEGE

**ADMISSIONS — 1975**

Apply before 3rd Nov. 1975 on forms available at the Office, for admission to Grades 1 to 6, 10 (HNCE) & 11 (Adv. Level).

Scholarships available at Grade 5, 6, 10 & 11.

Vaddukoddai, PRINCIPAL
10-10-75.

**St. Peter's Pre-School Teachers' Training, Diploma Course,**

January to December, 1976, English medium at Trimmer Hall, Jaffna.

Minimum qualifications G. C. E. (O. L.) with six subjects including English.

Age: 17 to 40 years.

*Applications to*:

**Miss C. Veerakathipillai,**
21, 2nd Cross Street, Jaffna
on or before 15-11-75.


## IN MEMORIAM

IN LOVING MEMORY OF

**Rev. William Ayadurai Rajadurai**

Called to Rest: 9-10-67

*"Years roll swifty by
But precious memories never die."*

Sadly missed by your loved ones.

Chavakachcheri,
9-10-75.

## IN MEMORIAM

IN LOVING MEMORY OF

**Mailvaganam Moses Muththu**

Called to Rest 9-10-72

*"In God's care you rest above
In our hearts you dwell with love."*

Affectionately remembered by his children, grand children and great-grand children.

Imyanan,
Uduppiddy.

# உதயதாரகை
UTHAYATHARAKAI
Estd. 1841

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 135 ] 10 — 10 — 1975 [ இதழ் 40


## காந்தியடிகளும் கிறிஸ்தவர்களும்

காந்தியடிகளின் நூற்றியாறாவது பிறந்த நாள், நம் நாட்டின் சில பகுதிகளில் இம்மாதம் இரண்டாம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஒரு காலத்தில் பலருக்குக் 'காந்திஜி' என்ற பெயர் உள்ளத்தை எழுச்சியடையச் செய்யும் ஓர் ஒப்பற்ற மந்திரச்சொல்லாயிருந்தது.

இன்று, இங்குமட்டுமல்ல இந்தியாவிலும் காந்திஜியின் பெயர் நாம் எதிர்பார்த்தளவு எழுச்சியை ஏற்படுத்துவதாகக் காணவில்லை. காந்திஜியின் வாழ்க்கை ஒரு முடிந்த அத்தியாயமாகவே பலர் கருதத்தலைப்பட்டுவிட்டனர். வேறு சிலர், காந்திஜியைத் தம் வணக்கத்திற்குரிய விக்கிரகமாக்கிவிட்டனர்.

கிறிஸ்தவ சாகியமாக காந்திஜியை நாம் நினைவுகூரும்போது, அவரது வாழ்க்கைக்காகவும் சேவைக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்துவது நம் கடமை.

இயேசுபெருமானின் போதனைகளைப் பகட்டுப் பக்தியின் சொற்பெருக்கல்ல, அவற்றை உண்மையாகவே நாம் கடைப்பிடிக்கலாம் என்பதை மகாத்மா தம் வாழ்க்கையின் மூலம் நிரூபித்து வாழ்ந்து காட்டினார். கிறிஸ்துவின் போதனைகளின் சாதனையாகக் காந்தியடிகள் விளங்கினார் என்பது மிகையாகாது.

திருச்சபைக்குக் காந்தியடிகள் தம் போதனையினாலும் சாதனையினாலும் விடுக்கும் அறைகூவலைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்; காந்திய செல்வாக்கு இந்திய திருச்சபையை வளமுறச் செய்ததென்பதை நாம் மறுக்கமுடியாது கிறிஸ்தவர்களாகிய நாம் காந்திஜிக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்;

காந்தியடிகள் உள்ளத்தூய்மை பெற்றுப் பற்றற்ற பெருந்தன்மையோடு மக்களுக்குச் செய்யும் பணியே தம் வழிபாடாய்க் கொண்டு வாழ்ந்தார். உலகத்தை ஒதுக்காமல் உலகத்திற் கலந்து நின்று மக்களுக்குப் பணிபுரிவதையே உயர்வாகக் கருதி வந்தார்.

என்ன இடையூறு வந்தாலும் தளராமல், புகழ், பழி முதலியவற்றைப் பொருட்படுத்தாமல், தம் குறிக்கோளை மறக்காமல், நேர்மையுடனும் கட்டுப்பாட்டுடனும் தம் பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். இவரது வாழ்க்கை இத்தகைய உரமும் மாண்பும் பெற்ற சிறந்த வாழ்க்கையாகும்.

உலகமனைத்தும் தம்மைப் புகழ்ந்தாலும் மகிழாமல், பழித்தாலும் கவலைப்படாமல், விரும்பினாலும் மயங்காமல், வெறுத்தாலும் துறக்காமல் மக்களுக்குப் பணியாற்றிச் சமூக அநீதிகளை எதிர்த்துப் போராடி, அரசியலுக்குப் புனித ஆன்மீகக்கருத்தைக் கொடுத்தார்.

கிறிஸ்தவர்களாக நாம், இச்சேவையின் அறைகூவலைத் தொடர்ந்து ஏற்கவேண்டும். உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, செயலில் மெய்மை என்பதே காந்தியடிகளின் சத்திய வழிபாடாக விளங்கியது. இதனை நாம் பின்பற்றினால் நம் ஆன்மீக வாழ்வு செழிக்கும்.

காந்தியடிகள் தாம் இந்து சமயத்தைச் சேர்ந்தவர் என வெளிப்படையாகக் கூறினார். இருந்தும், இவர் கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்த நற் போதனையையும் அறிவுரைகளையும் நாம் என்றும் மறக்கமுடியாது.

கிறிஸ்தவ அறநெறியில் வாழ்ந்து, நம் விசுவாசத்தைக் கிறிஸ்தவரல்லாத நமது சகோதரருடன் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கும் நமக்கு, இன்றும் என்றும் காந்திமகாத்மா குற்றம்காட்டிக் குறைதீர்க்கும் குருவாகவும், உள்ள எழுச்சியூட்டும் ஒப்பற்ற சக்தியாகவும் விளங்க முடியுமென்பதே எம் கருத்தாகும்.

தம்மை ஆண்டவரும் மீட்பருமென்று ஏற்றுக்கொள்ளாத மனிதருடனும் இயக்கங்களோடுங்கூட கிறிஸ்து பெருமான் இருந்து கிரியை செய்து வருகிறார் என்ற உண்மையைக் காந்தியடிகள், விநோபா போன்ற பெரியாரின் வாழ்வில் நாம் காண்கிறோம்.

---

செய்திகள்

### காந்தியடிகளின் பிறந்த தின விழா

மகாத்ம காந்தியின் பிறந்த தின விழா இம்மாதம் 2ஆம் நாள் மாலை 6-00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில், யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினரால், மன்றத்தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் அருட்திரு. டி. ஆர். அம்பலவாணர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆசிரியர் திரு. குலரத்தினம் ஆகியோர் சொற்பெருக்காற்றினார்; இலசமணி மோகனும் பிளை கணேசன் காந்திய கீதங்களைப் பாடினார். காந்தி சேவா சங்கச் செயலர், ஆசிரியர் திரு. இராஜசேகரம் நன்றி நவின்றபின், மன்றக் கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது.

### கெனமனின் சிபார்சு!

பல்கலைக்கழக வளாகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் திறமைக்கு 70 சதவீதமும், பின்தங்கிய பகுதிகளில் கோட்டா முறைக்கு 30 சதவீதமும் அளிக்குமாறு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் தலைமையிலான மந்திரிமார் உபகுழு சிபாரிசு செய்துள்ளது. இச்சிபார்சினைத் தமிழ்பேசும் பெற்றோர்களும், கல்விமான்களும் வரவேற்கின்றனர்.

---

## ஞானஸ்நானம்

(வண. எம். ஏ. இரத்தினராஜா, B. A., B. D.)

(முற்றொடர்)

கிறிஸ்து இயேசுவினால் விசுவாசத்தின் மூலம் கிடைக்கும் கிருபையின் வாழ்க்கைக்கு ஓர் எத்தனமாகவும், அவரது திருச்சபையிலே அங்கத்துவம் பெறும் அடையாளமாகவும் ஞானஸ்நான சடங்கு அநுஷ்டிக்கப்பட்டதை நாம் கவனிக்குமிடத்து, குழந்தை ஞானஸ்நானம் முற்றிலும் தகுதியானதே என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியும்.

பழைய ஏற்பாட்டை நாம் படிக்கும்போது, அங்கே கடவுளுக்கும் மனுஷனுக்குமிடையே ஏற்பட வேண்டிய உடன்படிக்கையைப் பற்றி நாம் வாசிக்கிறோம். மனுஷன் கடவுளோடு உடன்படிக்கை செய்ய அழைக்கப்பட்டான். ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் அவ்வித உடன்படிக்கையிலே பங்குபற்ற அவர்கள் அழைக்கப்பட்டனர். உடன்படிக்கை என்பது என்ன என விளக்கமறிந்த வளர்ந்தோர் மட்டுமன்றி, அதன் விளக்கத்தை அறியாத குழந்தைகளும் உடன்படிக்கை செய்ய அழைக்கப்பட்டனர், அவ்வாறு வளர்ந்தோரும் குழந்தைகளும் கடவுளோடு உடன்படிக்கை செய்யும் சடங்கிலே பங்குபற்றினர். இவ்வித உடன்படிக்கையின் அடையாளமாக விருத்தசேதனம் என்னும் சடங்கு உபயோகிக்கப்பட்டது; ஆபிரகாமோடு கடவுள ஏற்படுத்திய உடன்படிக்கையிலே, ஆண் குழந்தைகள் யாவரும் விருத்தசேதனம் என்னும் சடங்கு மூலம், தம்மோடு உடன்படிக்கை செய்ய வேண்டுமெனக் கற்பித்திருந்தார். (ஆதி: 17 : 10—14) (உபா. 19 : 9—18) விருத்தசேதனவிளக்கம் அறிந்த வளர்ந்தோர், அதன் விளக்கமறியாத ஆண்குழந்தைகளையும் அச்சடங்குக்குட்படுத்தினர் எனக் காண்கிறோம். அதன்படி குழந்தைகள் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பெற்று, கடவுளுடைய உடன்படிக்கைக்குப் பாத்திரவான்களாக்கப்பட்டன, அவ்வித உடன்படிக்கையின் பொறுப்பு முழுவதையும் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர். விருத்தசேதன சடங்கே உடன்படிக்கைச் சடங்காக அநுஷ்டிக்கப்பட்டது. யூத மதத்திலே சேரும் ஒவ்வொருவரும் இவ்வித உடன்படிக்கைச் சடங்கான விருத்த சேதனத்தை ஏற்கவேண்டியிருந்தது. இவ்வகையில் "விருத்தசேதனம்" என்னும் சடங்கு, உடன்படிக்கையின் சடங்காயும், யூத மத அங்கத்துவத்தின் சடங்காயும் அநுஷ்டிக்கப்பட்டது என நாம் காண்கிறோம். விளக்கமறியாத குழந்தைகளும் விருத்தசேதன சடங்கு மூலம் உடன்படிக்கையின் கிருபைக்குப் பாத்திரராயினர்.

பழைய உடன்படிக்கையின் காலம் போய், கிருபையின் உடன்படிக்கையான புதிய உடன்படிக்கை ஏற்பட்டபோது, விருத்தசேதன சடங்குக்குப் பதிலாக, ஞானஸ்நானம் என்னும் சடங்கு அருளப்பட்டது. "சகல ஜாதிகளையும் சீஷராக்கி ......... ஞானஸ்நானம் கொடுங்கள்" என்ற ஆண்டவர் கட்டளையில, கடவுளோடு செய்யும் உடன்படிக்கைக்கும் சீஷத்துவ அடையாளத்துக்கும் ஞானஸ்நானம் ஒரு சடங்காகக் கூறப்பட்டதைக் காண்கிறோம். அதன்படி கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்து, அவரது திருச்சபையிற் சேர்ந்தோர் யாவருக்கும் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டது எனக் காண்கிறோம்.

விளக்கமறியாத குழந்தைகள் எவ்வாறு ஞானஸ்நானம் பெறமுடியும் என்பது அநேகர் கேட்கும் கேள்வி. அவ்வாறாயின், விளக்கமறியாத குழந்தைகள் எவ்வாறு விருத்தசேதனம் பெற்று, கடவுள் உடன்படிக்கைக்குட்பட்டு, அவருடைய ஆசீர்வாதத்துக்குப் பாத்திரராயினர் என்பது மறுகேள்வி. அன்று விளக்கமறியாத குழந்தைகளை விருத்தசேதனம் மூலம் உடன்படிக்கைக்குட்படுத்தி அவர்களுடைய மார்க்க வாழ்க்கைக்குப் பொறுப்பாகப் பெற்றோர் நிற்க அழைக்கப்பட்டதுபோலவே, இன்றும் விளக்கமறியாத குழந்தைகளை ஞானஸ்நானத்தின் மூலம் உடன்படிக்கைக்குட்படுத்தி, அவர்களுடைய மார்க்க வாழ்க்கைக்குப் பொறுப்பாக நிற்கும்படி பெற்றோர் அழைக்கப்படுகின்றனர். ஞானஸ்நானமானது, கடவுளைப் பற்றும் "நல் மனச்சாட்சியின் உடன்படிக்கை" என பரி. பேதுரு கூறுகிறார். (I பேதுரு 3 : 21) இவ்வித உடன்படிக்கையில் வளர்ந்தோர் மட்டுமன்றி, குழந்தைகளும் பங்குபற்ற முடியும் என்றும் அவ்வித உடன்படிக்கைக்குத் தங்கள் பிள்ளைகளை ஒப்புக்கொடுப்பது பெற்றோரின் கடமை என்றும் காண்கிறோம். இச்சத்தியத்தை அடிப்படையாய்க் கொண்டே ஆதியிலிருந்து, திருச்சபையில் குழந்தை ஞானஸ்நானம் வழக்கத்திலிருந்து வந்திருக்கிறது. பழைய உடன்படிக்கையிலே குழந்தைகளுக்குப் பங்குண்டு என்போமாயின், புதிய உடன்படிக்கையிலும் அவர்களுக்குப் பங்குண்டு என்பதை நாம் மறுக்க முடியாது, எனவேதான் ஆண்டவரும், "சிறு பிள்ளைகள் என்னிடம் வருவதற்கு இடங் கொடுங்கள். அவர்களைத் தடை செய்யாதிருங்கள்" என்றார், சிறுவர்களை ஏற்றுக்கொள்ள அவர் ஆயத்தமாயிருக்கும் போதும், அவர்களோடும் ஞானஸ்நான சடங்கு மூலம் உடன்படிக்கை செய்து, அவர்களைத் தம் சபையிலே சேர்க்க அவர் ஆயத்தமாயிருக்கும்போதும், அச்சிறுவர்களைச் சேரவிடாது தடுக்க நாம் யார்? அவர்களைத் தடுத்து அதட்டும் போதெல்லாம் இயேசு விசனப்படுகிறார்.

(தொடரும்)

---

### ஆச்சரியம் ஆனாலும் உண்மை

ஹென்றி ட்ரம்மண்ட் (Henry Drummend) எனும் கிறிஸ்தவ பக்தர், ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகக் கடற் பிரயாணஞ் செய்து வருகையில், அவருடன் நான்கு பிரயாணிகள் சென்றனர் அந்நால்வரும் வெவ்வேறு மொழி பேசுபவர்கள். ஒருவர் பேசுவது மற்றவருக்கு விளங்காது. இங்ஙனம் திகைத்துக் கொண்டிருக்கையில், அவர்களிலொருவர் ஒரு வேதபுத்தகத்தைக் கொண்டுவந்து, தான் ஒரு கிறிஸ்தவன் என்பதைச் சொல்லாமலே விளக்கினார் இதைக்கண்ட மற்றப் பிரயாணிகளும் தம்தம் அறைகளுக்குச் சென்று தங்கள் வேதப்புத்தகங்களைக் கொண்டு வந்தனர். நால்வரும் கிறிஸ்தவர்களென்பது இதனால் விளங்கிற்று. அவர்களிலொருவர் தன் வேதப் புத்தகத்தைத் திறந்து, யோவான் சுவிசேஷம் 3-ம் அதிகாரம் 16-ம் வசனத்தைச் சுட்டிக்காட்டினார்; மற்ற மூவரும் தம்தம் புத்தகங்களில் அவ்வசனத்தை யெடுத்து வாசித்தனர். வார்த்தைகளில்லாமலே அவர்களுடைய உள்ளம் ஒன்றுபட்டது கிறிஸ்துவினுடைய அன்பின் கட்டுகள் எல்லாத் தேசத்தவரையும், பாஷைக்காரரையும் ஒன்றுபடுத்தி இணைக்கும்.

## யாழ். தெ. இ. திருமண்டில வாலிபர் பேரவை

### உள் அரங்க விளையாட்டுப் போட்டிகள்

மேற்படி பேரவை, கடந்த 7-10-75 அன்று திருமண்டில வாலிபர் அனைவருக்குமான உள் அரங்க விளையாட்டுப் போட்டி ஒன்றை அதிவிமரிசையாக நடத்தியது. இப்போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு, மானிப்பாய் Y. M. C. A. நிறுவனத்தார் இடம், உபகரணங்கள் முதலியன வற்றையும், மத்தியஸ்தர்களையும் தந்துதவினர்.

தெல்லிப்பழை, ஏழாலை-வடக்கு, தெற்கு, உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை, நவாலி, சாவகச்சேரி ஆகிய திருச்சபைகளிலுமிருந்து பெருந்திரளாக வாலிபர்கள் பங்குபற்றிய இப்போட்டிகளிற் பின்வருவோர் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### மேசைப் பந்தாட்டம் (Table Tennis)

**இரட்டையர் (Doubles) ஆண்கள்**

முதலிடம்: R. N. கஜேந்திரன்
R. Y. தம்பிராசா
வட்டுக்கோட்டைத் திருச்சபை.
இரண்டாவது: V. R. குணசிங்கம்
C. திருநேசன
சாவகச்சேரித் திருச்சபை.

**தனிமை ஆட்டம் (Singles) ஆண்கள்**

முதலிடம்: C. திருநேசன்
சாவகச்சேரித் திருச்சபை.
இரண்டாவது: S. ஜெயரூபன்
பண்டத்தரிப்புத் திருச்சபை

**தனிமை ஆட்டம் (Singles) பெண்கள்**

முதலிடம்: S. சற்குணமலர்
வட்டுக்கோட்டைத் திருச்சபை.
இரண்டாவது: T. அற்புதநிதி
வட்டுக்கோட்டைத் திருச்சபை.

### பூப்பந்தாட்டம் (Batminton)

**இரட்டையர் — ஆண்கள்**

முதலிடம்: N. நேசராஜா
R. E. இராஜன்
ஏழாலை தெற்குத் திருச்சபை.
இரண்டாவது:
பீற்றர் கனகசிங்கம்
மகேந்திரன் நல்லையா
தெல்லிப்பழைத் திருச்சபை

**இரட்டையர் — பெண்கள்**

முதலிடம்: S. சற்குணமலர்
T. அற்புதநிதி
வட்டுக்கோட்டைத் திருச்சபை.
இரண்டாவது: N. தேவகிருபை
N. சாந்தகுமாரி
ஏழாலை தெற்குத் திருச்சபை.

**இரட்டையர் கலவன் (Mixed Doubles)**

முதலிடம்: N. சாந்தகுமாரி
N. நேசராஜா
ஏழாலை தெற்குத் திருச்சபை
இரண்டாவது: T. அற்புதநிதி
R. N கஜேந்திரன்
வட்டுக்கோட்டைத் திருச்சபை.

**தனிமை ஆட்டம் — ஆண்கள்**

முதலிடம்: N. நேசராஜா
ஏழாலை தெற்குத் திருச்சபை.
இரண்டாவது: T. சிறிதரன்
ஏழாலை தெற்குத் திருச்சபை.

### வில்லை சுண்டுதல் (Carrom)

**இரட்டையர் — பெண்கள்**

முதலிடம்: N. சாந்தகுமாரி
N. தேவகிருபை
ஏழாலை தெற்குத் திருச்சபை.
இரண்டாவது: J. கிருபைக்குமாரி
A. பவானி
வட்டுக்கோட்டைத் திருச்சபை.

**இரட்டையர் — ஆண்கள்**

முதலிடம்: T. ஜெகமஞ்சுதன்
V. இரத்தினரூபன்
ஏழாலை வடக்குத் திருச்சபை.
இரண்டாவது:
S. ஜெயரூபன்
V. மகேந்திரகுமார்
பண்டத்தரிப்புத் திருச்சபை.

**தனிமை ஆட்டம் — ஆண்கள்**

முதலிடம்: K. இரஞ்சிற்குமார்
ஏழாலை வடக்குத் திருச்சபை.
இரண்டாவது: V. இரத்தினரூபன்
ஏழாலை வடக்குத் திருச்சபை.

## உண்மையாக நடந்த சம்பவம்!

ஸ்காட்லாந்து தேசத்தில் இயேசுவுக்காகத் தம் ஜீவனை இழந்தவரில் ஹியூ மக்கேல் (Huge Mackail) என்பவரும் ஒருவர். இவர் தம் வாலிப வயது தொடங்கி, தன்னை நமதாண்டவராகிய இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, இருபது வயதிலேயே வல்லமையான பிரசங்கியாக விளங்கினுர். மிக வைராக்கியமாய் இயேசுவுக்காக ஊழியஞ் செய்தார். தமது ஊழியத்திற்குத் தடையாயிருந்த உலக அதிகாரிகளோடு தைரியமாய்ப் போராடினுர். அதிகாரத்தை எதிர்த்ததினுல் அவரை இராஜ துரோகியெனத் தீர்த்து, மிகக் கொடிய தண்டனை விதித்தனர் அவ்வூர் அதிகாரிகள்.

தண்டனையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார் ஹியூ மக்கேல். அவருடைய காலை ஒரு குறுகிய இரும்புக் குழாயில் இறுக்கமாக நுழைத்து முழங்கால் முன் ஓர் ஆப்பு (Wedge) நுழைத்து, அதைச் சுத்தியலால் அடித்துச் சிறிது சிறிதாக உள்ளே தள்ளினுர்கள். இவ்விதம் பதினொருதரம் செய்தார்கள். அவரின் கால் நொறுங்கினது. இந்த நிலையில் அவரைச் சிறைச்சாலைக் கிடங்கிற்குக் கொண்டு போனுர்கள். போகும் வழியில் சந்தித்த ஒரு சிநேகிதனைப் பார்த்து, "ஆ! என்ன சந்தோஷம், இயேசுவினிடம் சேர இன்னும் நான்கு நாட்கள்தானே இருக்கிறது!" என்று முகமலர்ச்சியுடன் கூறினுர்.

அவர் தூக்கு மரத்தில் ஏற்றப்படவேண்டிய நாளின் முந்தின இரவு தன்னுடன் நித்திரை செய்தவரை எழுப்பி, "ஆண்டவரே, என்னை மரணத்திலிருந்து விடுவியும்" எனச் செபியாமல், "உமக்குச் சிறந்த சாட்சியாய் நான் விளங்க எனக்குப் பெலன் தாரும்" என்று அவருடன் செபித்தார்.

பொழுது விடிந்தது. தூக்கு மேடைக்கு ஹியூ மக்கேல கொண்டுபோகப்பட்டார். அங்கு தன் அழியா விசுவாசத்தைத் தெளிவாக எடுத்துக் கூறி, அதன் முடிவில் "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன், கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்" என்று உரத்த சத்தமாய்த் துதித்து, ஏணியின்மேல் ஏறினுர். ஏறும்பொழுது "என் தந்தையின் வீட்டுக்குச் செல்லுகின்றேன். ஒவ்வொரு படியும் என்னை அவ்வீட்டுக்குக் கிட்டக் கிட்டச் சேர்க்கிறது" என்று சொல்லிக்கொண்டே மேடையின் உச்சிக்குச் சென்றுர். உச்சியை அடைந்ததும், அங்கு சற்று நேரம் உட்கார்ந்து, தன் வேதப் புத்தகத்தைத் திறந்து, கடைசி அதிகாரத்தில் சில வசனங்களை உரத்த சத்தமாய் வாசித்து, அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு நித்திய இராஜ்பதத்தைக் குறித்து உருக்கமான பிரசங்கஞ் செய்தார். தூக்குக் கயிறு கழுத்தை நெருக்குகையிலும் அவர் வாயிலிருந்து துதியும் ஸ்தோத்திரமுமே எழும்பின!



## நன்றி செலுத்தும் ஆராதனை

உசன் சபையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு தம்பிமுத்து சின்னத்துரை றிச்சேட்ஸ் அவர்களுடைய வாழ்க்கைக்காக நன்றி செலுத்தும் ஆராதனை இம்மாதம் 5-ம் திகதி பிற்பகல் 4-15 மணியளவில் உசன் சபைத் தேவாலயத்தில் நடைபெற்றது.

இவ்வாராதனை அருட்திரு. கே. எஸ். ஜெயசிங்கம் அவர்களால் அருட்திரு E. D. இராசரத்தினம், திரு. J. S. மார்க்கண்டு ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்டது. திரு றிச்சேட்ஸ் அவர்களின் பேரப்பிள்ளைகள் கிறிஸ்ரி ஞானச்செல்வம், தேவராஜ் ஆகியோர் திருமறைப் பாடங்களை வாசித்தனர். செல்வி சாந்தினி ஜெயராஜசிங்கம், செல்வி S. கனகரத்தினம், திரு றிச்சேட்ஸ் குடும்பத்தினர் ஆகியோர் சிறப்புப் பாடல்கள் பாடினர் திரு உவில்லியம் தேவதாசன் இரங்கலுரை வழங்கினுர் கனம் ஜெயசிங்கம் அருளுரை யாற்றினுர்

ஆராதனை முடிவில் நடைபெற்ற திருவிருந்தில் அனைவரும் பங்குபற்றினர் காலஞ்சென்ற திரு. த. சின்னத்துரை றிச்சேட்ஸ் உசன் சபையின் செயலாளராகப் பல ஆண்டுகள் கடமையாற்றினுர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேர்வில் சித்தியடைந்தார்

யாழ்ப்பாணக்கல்லூரி நூலக அதிபர் திரு. S. J. மாணிக்கம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பி. ஏ. (தமிழ்) தேர்வில், தமிழை முக்கிய பாடமாக எடுத்துச் சித்தியடைந்துளார்.

இவர் நமது பத்திரிகையாகிய "உதயதாரகை"யின் உதவி ஆசிரியராகவும், சங்கானைச்சபையில் பகுதிநேர ஊழியனுகவும் பணிபுரிந்து வருகிறுர்.

## இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவு

கடந்த இருபத்தைந்து வருடகாலமாக யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திருவாளர் S. A. போல்ருஜ் அவர்களுக்கு, சென்ற புதன்கிழமை 1-10-75-ல் வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில மாலை 3 மணிக்கு ஸ்தோத்திர ஆராதனை நடத்தப்பட்டது. இவ்வாராதனை திருவாளர் L. J. D. மகிழ்ருஜன் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. கனம் S. N. சுகுணாநந்தன் அவர்களினுல செய்தி கூறப்பட்டது. அன்னுரின் பிரசங்கத்தின்போது கடந்த இருபத்தைந்து வருடத்தை ஆசிரிய சேவையில் திரு. போல்ருஜ் செலவிட்டார் என்று கூறும் பொழுது, எவ்வளவு மகிழ்ச்சி. இந்தக் காலத்தைத் திரும்பிப்பார்க்கும்பொழுது எவ்வளவு ஆச்சரியமாக இம்மட்டும் வழிநடாத்திய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவதேயல்லாமல், நாங்கள் வேறு என்ன செய்தாலும் அவை யெல்லாம் இம்மகத்துவத்துக்கு ஈடாகமாட்டாது என்னும் பொருள்படக்கூறி, தேவனை மகிமைப்படுத்தினுர். கல்லூரி அதிபர் அவர்கள் ஒரு வேதாகமப் பரிசு வழங்கினுர், பின்னர் வழமைபோல் ஆசிரிய குழு அங்கத்தினரைப் படம் பிடிக்கப்பட்டது, இரவு 7-30 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை தலைவர் திரு. V. செல்வரட்ணம் அவர்களின் தலைமையில் விருந்துபசாரம் நடைபெற்றது. இந்த


க. பொ. த. உயர்தரத் தேர்வுக்கு உரிய

**திருக்குறள்**

பொருட்பால் — ஒழிபியல்
பதவுரை, விசேடவுரை
இலக்கணக் குறிப்பு யாவும்
மிக எளிமைப்படுத்திய
உரையுடனும்,
எல்லா அதிகாரங்களுக்கும்
விரிவான
மாதிரி விடைகளுடனும் கூடியது
விலை ரூபா 3-75

**சண்முகநாதன் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்


## டச்சு சீர்திருத்த சபையின் 333 ஆம் ஆண்டு நிறைவு!

இலங்கையில் உள்ள ஒல்லாந்தர் சீர்திருத்தச் சபை இம்மாதம் முற்பகுதியில் தனது 333 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிற்று. இச்சபை இலங்கையில் 1642 ஆம் ஆண்டு அட்டோபர் மாதம் 6 ஆம் திகதி நிறுவப்பட்டது.

இத் திருச்சபையின் தமிழ்ச் சபைகள், தமது வருடாந்த மாநாட்டை இம் மாதம் 5 ஆம் திகதி ரீஜெஸ்ரீட் ஆலயத்தில் நடத்தின. இம் மாநாட்டிற்குச் சிறப்பு விருந்தினராக அருட்திரு. எஸ். என். ஹிச்கொக் அவர்களும் அவர் மனைவியாரும் அழைக்கப்பட்டிருந்தனர்,

அருட்திரு. ஹிச்கொக் அவர்கள் 1937 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி 11 அங்கத்தினருடன் கொழும்பு வூல்வெண்டால் ஆலயத்தில் முதல் ஞாயிறு ஆராதனையை நடத்தினுர். 1937—1954 வரை இவர் டச்சு சீர்திருத்த திருச்சபையின் தமிழ்ச் சபைகளில் திருப்பணிபுரிந்து வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வேளையில் திரு V. இரகுநாத முதலியார் அவர்களினுல் ஆசிரியர் போல்ருஜ் அவர்களது நற்குண, நற்பண்பு, அவரது அயராத ஊக்கமான சேவைநலம்பற்றியும் மிகவும் சிறப்பாக எடுத்துக்கூறினுர். கல்லூரி அதிபர் அவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு இலக்கணமாக விளங்கும் திரு. போல்ருஜ் ஆசிரியர் அவர்கள் தனக்குக் கஷ்டம் இருந்தாலும் மாணவர்களுக்காகத் தனது நேரத்தையும் பாராது, தன்னை ஒறுத்து மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, தன்னுல் இயன்ற சேவையைப் பயனுள்ளதாகச் செய்துள்ளார் என்று கூறிய அதிபர், இவரது சகோதரன் திரு. S. J. மாணிக்கம் இம்முறை B. A. (Hons பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனப் பாராட்டிப் பேசினுர். பல வருடங்களுக்கு முன், யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து தேவஊழியர்களைத் தீவுப்பகுதிக்கு அனுப்பப்பட்டது. ஆனுல் இவரும், இவரது சகோதரனையும் போன்றவிரண்டு தேவஊழியர்களை நமமதியிற் காணக்கூடியதாகவிருக்கின்றதெனப் பாராட்டிப் பேசிய பொழுது இவர்களது சேவை யாழ்ப்பாணத் தென் இந்திய திருச்சபையில் எங்கும் காணக் கூடியதாகவிருக்கின்றதெனப் புகழ்ந்து பேசினுர். இறுதியில் ஆசிரியர் தன்னை இந்தக் கல்லூரியில் நீண்ட இந்த வருடத்தை இவரிடத்தில் செலவிட்டுச் சேவை புரியவைத்த தேவனுக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் கூறி, இவ்வைபவத்துக்காகவும் இவ்வைபவத்திற் கலந்து தன்னையும் தன் பாரியாரையும் பாராட்டியதற்காகவும், நன்றி கூறி முடித்துக்கொண்டார்,

# The Morning Star

**10th October, 1975**

## Education, Training and Employment

Youth today stands at the cross-roads. Educators, social workers and parents, too, share in their confusion, bewilderment and frustration. Formal education which in the past was a passport to Tertiary education or employment now seems to lead them nowhere.

Various factors are responsible for this crisis. The expansion of educational opportunities, the failure to diversify these, the economic crisis, the 'doctoring' of grades by standardization at the A-level and the district-quota system of admission to the University. We are glad that those in the Education Department and the University have realised that the attempt to help students in backward areas by admitting them to the University on a minimal basis is not at all equitable or fair by the very students who are admitted, as they lag behind in their studies while hundreds of others whose performance far exceeded theirs, languish in frustration or gnash their teeth at the perpetrators of this strange standardless standardization. In the interests of Higher Education, merit should not be ignored while those from the districts with their minimum performance should be conditioned to enter into the full life of the University by being oriented at Junior University Colleges where gaps in their learning can be well supplied. We hope that the sad but lamentable instance of a candidate with two A's, one C and an S being barred out of the Engineering Faculty last year while others, with poorer minimal performance, sailing smoothly into the University, will not occur again. We are glad that the National Planning Council Sectoral Committee under the Chairmanship of Mr. Pieter Keuneman, himself a product of one of the best universities — Cambridge, has recommended that 70% be admitted on merit and 30% on the district quota basis. Failure to recognise merit will be unwise and shortsighted — in the long run the nation will suffer by training the person with the one talent and not the one with more talents.

But we cannot stand at the cross-roads — we have to move on. Man through his long and varied history has demonstrated his resilience and ability to adapt himself to changing situations. The recent Report of UNESCO has challenged leaders in Church and State to re-think the role that the learning process has to play: "Education," it says "is facing a critical challenge and we must think it out afresh in its entirety." A gap between academic and manual work has been artificially introduced by society. There has been a higher premium on the white-collared worker, while the man with the khaki-shorts involved in manual pursuits has been assigned a lower place. The Department of Education has with its emphasis on Pre-Vocational studies attempted to bridge the gap. Greater interest in non-academic subjects have been shown by pupils and teachers. But when Art for Art's sake is ignored and aesthetic pursuits are tested with the yard stick of an examination then the joy of participating in such pursuits is lost and the fear of failure to cross the educational hurdle looms large and prevents the pupil enjoy his Pre-Vocational studies — P. T., Coir-work, Carpentry, Carnatic Music, or Bharata Natyam. The number of subjects moreover, a pupil takes at the National Certificate of General Education is far too many. While retaining a few core subjects, pupils must be allowed to limit the number of subjects to 5 or six subjects as is required by the Cambridge School Certificate Examination and other Public Examinations.

There is also a necessity for developing the critical awareness of pupils. Formal education has been referred to as a 'banking system' where the rational faculty of the pupil is not encouraged to develop. Examination of such false generalisations as "all men are liars" and developing in students the critical faculty has to be encouraged. There must be more opportunities for dialogue, within the formal educational system so that in the inter-play of mind upon mind the truth may be grasped and accepted.

The UNESCO Report has further emphasised that "Education is a life-long process involving the whole person not for his own benefit but for the whole community." The On-going Social emancipation that education can achieve through life has been ignored in the past, and national leaders like President Julius Nycrere of Tanzania have set up crash-programmes to educate their adults so that the entire people may move forward together in the social and economic development of the nation. Thus education should be a continuing process within the walls of the school and beyond it — through adulthood to middle age and old age. When a person refuses to be educated he dies — mentally, spiritually, and finally physically.

New ground has been broken in recent years by governmental and non-governmental organizations to help with the problems of education, training and employment. Within the school system there has been a gradual orientation to help the individual socially, vocationally and personally to become a useful member of the community, and to this end his abilities trained, developed, intensified and sharpened. The Trinity College Farm at Pallekelle is a case in point within the school system and Navajeevanam, Paranthan is one for the push-outs and rejects of the school system. But these only touch the fringe of the problem and provide partial answers. They do not deal adequately with the larger problems of society which require a broad cultural revolution with fuller popular involvement.

There should be also closer co-ordination between voluntary agencies, irrespective of denominational and religious loyalties. Let the competitive spirit be sublimated by the spirit of co-operation and collaboration, so that the mature experience of those who have been longer in the field of Further Education be available to the novices. In the Paranthan-Kilinochchi area there are many voluntary agencies at work in helping youth to be trained for employment. But is there co-ordination or duplication of effort? New coalitions among voluntary organisations may help to create closer understanding as well as remove the sting of rivalry among voluntary societies and help more youth to be educated, trained and gainfully employed.

*A. J. C. S.*

## GRACE J. PAUL,

M. A. (Columbia)

*A brother's tribute*

This International Women's Year also marks the passing away of one of Sri Lanka's greatest educationalists. Born in humble surroundings, daughter and grand-daughter of country parsons, she nevertheless bore the torch of learning aloft. Several times during her life she had bemoaned the fact that all the 'high-ups' she had to deal with, were men, who could not appreciate the woman's point of view. Managers of schools, contractors, Missionaries, Directors of Education, they were men born with an inborn conviction that no woman could equal men in any field of endeavour.

When Grace was offered a scholarship to America, at the age of twenty, and was preparing to depart her father was down with a raging fever. Nevertheless he urged her to go, saying that it was God's will she should go, even though he may not be alive when she returned.

On her return from the States she joined her Alma Mater, the Uduvil Girls' School as a Science mistress. When the school split up into two sections, the Uduvil English School and the Uduvil Bilingual School, she became principal of the Bilingual Section. This school did so well that the late Mr. H. S. Perera wrote in his report that this is the only school in Jaffna which has registered positive gains in the experiment of Bilingual education. (I quote from memory.) The performance of the Bilingual students in the English S. S. C. examination equalled those from the other section.

Sadly she bade farewell to Uduvil which held so many memories for her, and accepted a post as Maths. and Science teacher in Girls' High School, Kandy. This change was a blessing in disguise, for the people of Kandy adopted her as their own. When she was appointed Principal of the school, the school was in debt financially. By her own efforts and those of her sympathisers the debt was wiped off, and moreover the school was left with a positive balance. A new Science building was put up with the help of architects and engineers who gave her help and advice generously and voluntarily. A Science Laboratory up to the H. S. C. standard was organised. I personally helped her to obtain a mains clock for the building, which had a spring reserve which cuts into the action when the mains failed, and cuts out when the mains come again. It was my hope that the clock will keep on ticking long after she died I don't know whether it still ticks on.

After retirement from Kandy she functioned as principal of Milagiriya Girls' School, for some years. She also functioned as National Secretary of the Y.W.C.A., as General Secretary of the N.C.C., and served on the committees of the A. C. W. C., A. V. A. of the N. C. C., and Religious Education committee of the N. C. C. She also read and wrote widely, and enjoyed the fellowship of a large circle of friends.

We do not mourn the passing away of such a person. Rather do we rejoice that there has lived such a person who has enriched the lives of so many by her singular devotion to duty, and care for the under-privileged children who always found her a second mother.

We may or may not believe in a future corporeal existence. But the intrepid spirit which refuses to be cowed down, and stirs in spite of difficulties, lives on.

Such a one was Grace.

R. H. PAUL

## IN MEMORIAM

**Primrose Sinnathangam Kanapathippillai**

who departed on the 17th of October, 1974

*Your life is our pride,*
*Your motherly love will never be forgotten,*
*We love you most*
*But Christ loves you best,*
*Since Christ is in the vessel.*
*We smile at the storm,*
*May light perpetual shine on her and*
*May her soul rest in perfect peace.*

By her sorrowing husband, children, sisters-in-law, nephews and grand children.

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 10th October, 1975.